## இருக்கு.. ஆனா இல்ல..உலுக்குது உரத்தட்டுப்பாடு..

திருவாரூர் மாவட்டம், வீரமங்கலம் சங்கர், கூறுகையில் என்னோட 20 வருஷ அனுபவத்துல ரசாயன உரமே இல்லாம நெல் விவசாயம் சாத்தியமே கிடையாது. குறுவையில் பூச்சித் தாக்குதல் இருக்காது. அதனால பூச்சி மருந்து தான் தேவைப்படாதே தவிர, ரசாயன உரம் கண்டிப்பா தேவை. போன வருஷம் 4 ஏக்கருக்கு ஏடிடீ43 நெல் விதைச்சிருந்தேன். ஏக்கருக்கு 8 சென்ட் நிலத்துல நாத்தாங்கால் போட்டு, ஒரு உழவு ஓட்டி, 30 கிலோ விதை போட்டேன். 10ம் நாள்ல 4 கிலோ யூரியாவும், 2 கிலோ ஃ.பாலிடால் டஸ்டும் கலந்து தெளிச்சேன். 30ம் நாள் நடவுக்கு நாத்து தயாராயிடுச்சி. ஒரு ஏக்கர் நிலத்துல 3 சால் டிராக்டர் உழவு செஞ்சி ஒரு மூட்டை டிஏபி அரை மூட்டை யூரியா கலந்து அடியுரமாப் போட்டேன். நட்ட 10ம் நாள்ல அரை மூட்டை காம்ப்ளக்ஸ் அரை மூட்டை யூரியா, அரை மூட்டை பொட்டாஷ் போட்டேன். 12ம் நாள்ல களையெடுத்தேன். 40ம் நாள்ல அரை மூட்டை யூரியா, அரை மூட்டை பொட்டாஷ் போட்டேன். திரும்பவும் 42ம் நாள் களையெடுத்து. 100வது நாள்ல அறுவடை செஞ்சேன். ஏக்கருக்கு 2,100 கிலோ மகசூல் கிடைச்சிது. வீரமங்கலத்தைச் சேர்ந்த குமார் **(தொலைபேசி : 0437 4202736)** கூறுகையில் இவரின் நிலமும் சங்கர் நிலம் போலவே களிமண் பூமிதான். அதே போல் ஏடிடீ 43 இரகத்தைத் தான் விதைக்கிறார்கள்.

ரெண்டு வருஷமா இயற்கை விவசாயம் தான். ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு 8 சென்ட் நிலத்தில் நாத்தாங்கால் போட்டு, ஒரு சால் உழவு ஓட்டி, 300 கிலோ தொழுவுரம் போட்டுத் தயார் செய்தேன். ஒரு சிமென்ட் தொட்டியில 100 மில்லி பஞ்சகாவ்யாவை ஊத்தி, அதுல 30 கிலோ விதையைப் போட்டு, விதை மூழ்குற அளவுக்கு தண்ணி ஊத்தி, 20 மணி நேரம் கழிச்சி எடுத்து, சாக்குல கட்டி மூட்டம் போட்டேன். 20 மணி நேரம் கழிச்சி, பிரிச்சி நாத்தாங்கால தெளிச்சிட்டேன். 15ம் நாள்ல 50 மில்லி பஞ்சகாவ்யாவை 25 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிச்சேன். 25ம் நாள் நாத்தைப் பறிச்சி, அதோட வேரை பஞ்சகாவ்யாவுல நனைச்சி நடவு செய்தாச்சி.

நடவுக்கு முன்னால 3 சால் உழவு ஓட்டி, அடியுரமாக 15 கிலோ கடலைப் புண்ணாக்கு, 10 கிலோ வேப்பம் புண்ணாக்கு போட்டேன். நட்ட 15ம் நாள் களையெடுத்து 20ம் நாள் 30 லிட்டர் அமுதக்கரைசலை 150 லிட்டர் தண்ணியில கலந்து தெளிச்சேன். 30ம் நாள் வேப்பம் புண்ணாக்கு 10 கிலோ, கடலைப்புண்ணாக்கு 6 கிலோவும் கலந்து தூவினேன். மறுபடியும் 35ம் நாள் களையெடுத்து.. 50ம் நாள் 3 லிட்டர் பஞ்சகாவ்யா 100 லிட்டர் தண்ணயில கலந்து தெளிச்சேன். 90ம் நாள் அறுவடை போன வருஷம் குறுவையில் ஏக்கருக்கு 1,960 கிலோ மகசூல் எடுத்தேன். நான் இயற்கைக்கு மாறி இது இரண்டாவது வருஷ மகசூல் மொத்த வருஷம் 1850 கிலோ எடுத்தேன். ரெண்டாவது வருஷம் 100 கிலோ கூடுதலா கிடைச்சிருக்கு. இந்த வருஷம் இன்னும்

கூடுதலா கிடைச்சிருக்கு. ரசாயன விவசாயத்தை விட இயற்கை விவசாயத்துல 10 நாள் முன்னாடியே அறுவடை செய்துடலாம். விலையும் கூடுதலா கிடைக்கும். எந்த உரக்கடையில் உரம் கிடைக்கும்ன்னு தவம் கிடக்க வேண்டியதில்ல. ஒரு ஏக்கரில் நெல் சாகுபடிக்கான செலவு - வரவு (ருபாய் மதிப்பில்)



| விவரம் | ரசாயன முறை | | இயற்கை முறை | |
|---|---|---|---|---|
| | செலவு | வரவு | செலவு | வரவு |
| நாற்றாங்கால் உழவு | 200 | | 200 | |
| விதை 30 கிலோ | 600 | | 600 | |
| விதை தெளிப்புக்கூலி | 50 | | 50 | |
| நாற்று பறிப்புக் கூலி | 1000 | | 1000 | |
| நடவுக் கூலி | 750 | | 750 | |
| உழவுக்கூலி | 1200 | | 1200 | |
| களையெடுப்பு 2 தடவை | 700 | | 700 | |
| உரங்கள் | 1375 | | 815 | |
| உரம் தெளிப்புக் கூலி | 300 | | 300 | |
| அறுவடைக் கூலி | 1500 | | 1500 | |
| மகசூல் | | 13560 | | 14033 |
| மொத்தம் | 7675 | 13650 | 7115 | 14033 |
| நிகர லாபம் | | 5975 | | 6918 |

இயற்கை முறையில் குறைவாக விளைந்தாலும், செலவும் குறைவே, ஒரு ஏக்கருக்கு 943 ரூபாய் கூடுதல் லாபம் கிடைத்திருக்கிறது.